**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**குற்றவியல் பல்வகை மனு எண். 7/2026.**

**மனுதாரர் தரப்பு சாட்சி –1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மகேந்திரன். | ஜாதி | |
| தந்தை பெயர் | பாலசுப்பிரமணியன். | தொழில் | வழக்கறிஞர். |
| கிராமம் | தப்புக்குண்டு. | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 35/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2025.

**மனுதாரரின் வாக்குமூலம்:–**

நான் தற்போது, தப்புக்குண்டில் குடியிருந்துகொண்டு, வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.12.2019 ஆம் தேதி என் மீதும், என் அப்பா மற்றும் என் மனைவி மீதும், கண்ணன் என்பவரின் தூண்டுதலின்பேரில், அவரது மனைவியால் எங்கள் மீது வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அதன் குற்ற எண். 515/2019 ஆகும். மேற்படி வழக்கை சமரசம் பேச வேண்டும் என்று கடந்த 09.03.2020 ஆம் தேதியன்று, காவல் உதவி ஆய்வாளர் திருமதி. மலரம்மாள் அழைத்து வரச் சொல்லியதாகக் கூறி, காவலர் அன்புக்குமார் என்பவர் என்னை அழைத்தார். நான், அவருடன் காவல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். என்னை அழைத்துச் சென்றவுடன், என்னிடமிருந்து கார் சாவியைப் பிடிங்கிக்கொண்டு, என்னை லாக்கப்பில் வைத்து என்னை சார்பு ஆய்வாளர் திருமதி. மலரம்மாள் மற்றும் ராதாகிருஷ்ணனும் அடைத்து விட்டனர். சார்பு ஆய்வாளர் திருமதி. மலரம்மாள் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால், ரூ.4 லட்சம் கொடுக்க வேண்டும் எனக் கூறினார்.

நான் முடியாது என மறுத்துவிட்டதால், என்னை காவல் நிலையத்தில் வைத்து அடித்தார்கள். அப்போது, புகார்தாரர் கண்ணன் காவல் நிலையம் வந்து, என்னிடம் பணம் கொடுக்குமாறு கேட்டார். நான் முடியாது என மறுத்தால், என்னை மறுபடியும் தாக்கினார்கள். எனக்கு மூக்கிலிருந்து இரத்தம் வந்து, நான் மயக்க நிலைக்குச் சென்றுவிட்டேன். பின்னர், 04.00 மணியைப்போல், என்னிடம் சில பேப்பர்களில், கொன்றுவிடுவோம் கையெழுத்துக் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். பின்னர், அன்று இரவு 08.00 மணியைப்போல், தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு மெடிக்கல் பிட் வாங்குவதற்காக என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு, என்னுடைய உடல்நிலையைப் பார்த்து, மருத்துவர் என்னை உள்நோயாளியாக அனுதித்துவிட்டார். பின்னர், மறுநாள் 10.03.2020 ஆம் தேதி, மருத்துவரின் அனுமதியில்லாமல் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சந்திரன் என்பவர் என்னை அழைத்துச் சென்றுவிட்டார். பின்னர், என்னை நீதித்துறை நடுவர் அவர்கள் முன்னிலையில் ஆஜர் செய்து, நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டேன். அதன்பின்னர்தான், கடந்த 09.03.2020 ஆம் தேதி என் மீது, கண்ணன் என்பவரால் பொய்யாக புகார் கொடுத்து, அதில் வீரபாண்டி காவல் நிலையக் குற்ற எண். 119/2020 பதிவு செய்யப்பட்டது எனத் தெரியவந்தது. பின்னர், வீரபாண்டி காவல் நிலையக் குற்ற எண். 515/2019–இல் தொடரப்பட்ட வழக்கில், கூடுதல் மகிளா (நீதித்துறை நடுவர்), தேனி அவர்களால் விடுதலை செய்யப்பட்டேன். மேற்படி, வீரபாண்டி காவல் நிலையக் குற்ற எண். 119/2020 என்ற வழக்கிலும் மாண்புமிகு மகிளா நீதிமன்றம், தேனி அவர்களால் விடுதலை செய்யப்பட்டேன். என்மீது பொய்யாக புகார் கொடுத்து, அதன்பேரில் மேற்படி வழக்கில் பொய்யாக சாட்சியம் அளித்த நபர்கள்மீது, நடவடிக்கை

எடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யவதற்காக வேண்டிக்கொண்டதால், முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.27 18:59:10 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**